**15.07.2026**

**O.S.No. 178/2022**

**வா.சா.1 : செல்வமாணிக்கம்**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

**1)** 86 செண்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என்றும் பைப் மற்றும் மின் இணைப்பு உள்ளதை எனக்கு ஊர்ஜிதப்படுத்த வேண்டியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் 1996 ல் ஏற்பட்ட பாக பிரிவினையின் அடிப்படையில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்படாத பாக பிரிவினை பத்திரத்தை நான், என் அப்பா, என் தம்பி மற்றம் அண்ணன் 4 பேரும் சேர்ந்து எழுதிக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பொய் சொல்கிறேன் என்றும் மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் என் அப்பா தரப்பினர் அல்ல என்றும் சொன்னால் என் அப்பாவின் வாய்மொழி சம்மதத்தில் அடிப்படையில் தான் அந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த பாக பிரிவினை பத்திரத்தில் அ-அட்டவணை சொத்து இஸ்ரவேலுக்கு பாத்தியப்பட்டது. நான் சொல்வது போல பாக பிரிவினை பத்திரத்தில் இல்லை என்றும் தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பாக பிரிவினை பத்திரத்தில் அ-அட்டவணை சொத்து இஸ்ரவேலுக்கும், கிருஸ்துராஜாவுக்கும் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவர்கள் இருவருக்கும் பொதுவாக வைத்துக்கொண்டார்கள்.

2) ஏன் பாக பிரிவினை பத்திரத்தை பதிவு செய்யப்படவில்லை என்று தாவாவில் எவ்வித காரணமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என் அப்பா பதிவு செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். என் அப்பா உயிருடன் இருக்கும் வரை அதை பிரிக்ககூடாது என்று சொல்லிவிட்டார். இந்த சொத்துக்களை சம்பாதித்தது என் தகப்பனார் லாஸர் தான் என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து உழைத்து சம்பாதித்து வாங்கப்பட்டது. சொத்துக்காக நான் பொய் சொல்கிறேன் என்றும்

அதனால் தான் என் அப்பா உயிருடன் இருக்கும் வரை பாகம் பிரித்து தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாக பிரிவினை பத்திரம் செய்யும் போது என் அப்பா உயிருடன் தான் இருந்தார். இந்த சொத்துக்கள் அனைத்தும் என் அப்பா பெயரில் தான் இருந்தது என்றும் நாங்கள் அவரை விட்டுவிட்டு எங்களுக்குள் பாக பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டது சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா சொத்தை தவிற மற்ற எல்லா சொத்துக்களையும் என் அப்பா தான செட்டில்மெண்ட் மூலம் எங்களுக்கு எழுதி வைத்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. அண்ணனுக்கும், தம்பிக்கும் , தங்கைக்கும் எழுதி வைத்துள்ளார். அந்த சொத்தை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. எழுதி வைக்காத சொத்திற்கு தான் இந்த வழக்கு. மேற்படி சொத்துக்கள் எல்லாம் என் அப்பா லாஸர் சம்பாதித்த சுயார்ஜித சொத்துக்கள் அதனால் தான் அவர் தன் விப்பப்படி அந்த சொத்துக்களை தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்று சொன்னால் அது பொதுவாக சம்பாதித்த சொத்தாகும். அவர் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரங்களை பொருத்து நான் வழக்கு எதுவும் போடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அதனால் போடவில்லை. நான் என் அப்பாவை பராமரிக்கவில்லை என்றும் அதனால் தான் அவரை பாதுகாத்து பராமரித்த பிரதிவாதிகள் மீது பாசம் கொண்டு அவர் சம்பாதித்த சொத்துக்களை அவர்களுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் நான் அதை மறுக்கிறேன்.

4) என் அப்பா சொத்தை 1980 ல் 4 ஏக்கர் 30 செண்டும், 1981 ல் 1 ஏக்கர் 86 செண்டும் வாங்கினார். எனக்கு தற்போது 67 வயது ஆகிறது. 21 வயதில் நாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்து கொடுத்து அதன் அடிப்படையில் என் அப்பா சொத்துக்களை வாங்கினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பதித்து வைத்துள்ள பைப் லைன் மற்றும் வண்டி தடத்தை மறிக்கிறார் என்றும் நிரந்தர உறுத்துகட்டளை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பைப் லைன் மற்றும் வண்டி தடம் அங்கேயே தான் இருந்து வருகிறது தற்போதும்

அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் சொல்வது போல பைப் லைன் மற்றும் வண்டி தடம் இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்றம் ஆணையர் நியமனம் செய்து அதை நீதிமன்றத்திற்கு தெரிவித்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.07.15 17:56:26 +0530

**Subordinate Judge, Attur.**